லும்பன் பக்கம்

வெஃகி வெறிய செயின்...

எனக்கு அந்த ஆசிரியையைச் சில ஆண்டுகளாகத் தெரியும். திறமை வாய்ந்தவர். தமிழுணர்வு கொண்டவர். நன்றாக விவாதிக்கக் கூடியவர். அவர் திருமணத்தின் போது வீட்டை அலங்கரித்துக் கொடுக்கும் அளவிற்கு எங்களுக்குள் நட்பு இருந்தது. எனது நட்பு வட்டம் சில பிச்சைக்காரர்களிடமும் பரதேசிகளிடமும் பைத்தியங்களிடமும் மட்டுமே இருந்ததால் இவர் போன்ற உயர் தட்டுப் பெண்கள் என்னுடன் பழகுவது எப்போதுமே கொஞ்சம் பதற்றத்தைக் கொடுக்கும். இந்தக் கட்டுரையின் கதாநாயகி இவர்தான் (கட்டுரையில் கதாநாயகி இருப்பாரா எனக் கேட்க வேண்டாம். லும்பன்கள் எழுதும் கட்டுரையில் யாரும் வருவார்கள் போவார்கள்)

ஒரு நாள் அந்தத் தோழி இரவு உணவு சாப்பிட என்னை அழைத்தார். பொதுவாகவே எனக்கு ஓசி சாப்பாடென்றால் மிகவும் விருப்பம். இந்நாட்டு இலக்கிய நிகழ்வுகளில் உணவுக்கு மட்டும் ஏற்பாட்டாளர்கள் தனி அக்கறை செலுத்துவதால்தான் என் போன்றவர்களால் கொஞ்சமாவது கூட்டம் கூடுகிறது.

நான் ஆறு மணிக்கெல்லாம் தயாராகி வயிற்றைக் காலி செய்து வைத்திருந்தேன். ஏழரை மணிக்கு என்னை அழைத்துச் செல்ல கார் வந்தது. உடன் என் தோழியின் கணவர் மற்றும் மாமனாரும் வந்திருந்தனர். வழக்கமான நல விசாரிப்புகளோடு கார் தலைநகர் நோக்கிப் புறப்பட்டது.

கோலாலம்பூர் வர்த்தக வளாகத்தைக் கார் நெருங்குகையில் நான் கேள்விக்குறியோடு தோழியை நோக்கினேன். முதலில் என்னை ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் அதன் பின்னர் சாப்பிடலாம் என்றும் கூறினார். கே.எல்.சி.சி அருகில் இருந்த ஒரு கட்டடத்திற்குள் என்னை அழைத்துச் சென்றார். போகும் போதே தோழியும் அவர் கணவரும் தங்கள் தன் முனைப்பு உரையைத் தொடங்கியிருந்தனர்.

“ஏன் நம்மால எதையும் சாதிக்க முடியல... எதிர்த்துக்கேட்க முடியல... ஏன் நம் குரலுக்கு இந்நாட்டில் மதிப்பு இல்லை... நம்மிடம் பொருளாதாரம் இல்லை. பொருளாதார பலம் இல்லாத ஒரு சமூகத்தின் குரலுக்கு எப்படி மதிப்புக் கிடைக்கும். எனவேதான் நாங்கள் உங்களை இங்கு அழைத்து வந்திருக்கிறோம்.” என்றார். அவர்கள் முகத்தில் பாவிகளுக்கு நல்வழி காட்டும் பரமனின் மகத்தான ஒளிக்கதிர்கள் பிரகாசித்தன. நான் மிகச் சாமன்யனானதால் அந்த ஞான ஒளிக் கீற்றுத் தாங்காமல் பின்வாங்கினேன். எனக்கு அவர்களின் பேரன்பின் வரம் வேண்டாம் என விலக முயன்றேன். ‘முடியவே முடியாது, நீ நாங்கள் தரும் வரத்தைப் பெற்றே ஆக வேண்டும்... பெறா விட்டாலும் பரவாயில்லை அதன் அற்புதத்தையாவது முதலில் விளங்கிக் கொள்ளேன்’ என அடம் பிடித்தனர்.

வேறு வழியில்லை. திரும்பிப் போகவும் டாக்சிக்குப் பணம் கொண்டுவரவில்லை. கட்டடத்தில் புகுந்தேன். முதல் தளத்தில் ,கண்ணாடி அலமாரியில் நிறைய மேசை விளக்குகள் அடுக்கிவைக்கப் பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டாயிரம் ரிங்கிட்டுக்கும் மேற்பட்டது. அவற்றிலிருந்து வெளிப்படும் ஒளியும் மணமும் பல நோய்களைத் தீர்க்க வல்லது என விளக்கம் அளிக்கப்பட்டது. விளக்கங்களை எனது தோழிதான் கொடுத்தார். பேச்சு நெடுகிலும் ‘இது எங்க அலுவலகம்’ என உரிமையோடு அந்தத் தளத்தை அழைத்துக்கொண்டார். அங்கிருந்த பலரும் அப்படித்தான் கூறிக்கொண்டனர். நினைத்த நேரத்தில் அவர்கள் அக்கட்டடத்தில் புக முடிவதும் லிப்டில் ஏறி இறங்க இயல்வதும் அதற்குக் காரணமாக இருக்கலாம். ஒரு பிரம்மாண்டத்தை எனது எனக் கூறிக்கொள்வதற்கான நுண்அரசியல் என் மூளையை குடையத் தொடங்கியது.

ஏதேதோ சுவரொட்டிகளும் பத்திரிகைச் செய்திகளும் வெவ்வேறு தளங்களில் ஒட்டப்பட்டிருந்தன. அவை பெரும்பாலும் சீனத்தில் இருந்தன. படங்களை மட்டும் பார்த்தேன். தோழிதான் விளக்கினார்.அவருக்கும் சீனம் தெரியாதுதான். யாரோ சீனம் தெரியாத ஒருவர்தான் என் தோழிக்கும் விளக்கியிருக்க வேண்டும். என் தோழி அந்தத் தளத்தில் இருந்த கணினியை இயக்கத் தொடங்கினார். அதில் ஓர் அழகிய பெண் படுக்கையில் உறக்கம் வராமல் படுத்திருந்தாள். எனக்கு இதற்கு முன் நான் திருட்டு வி.சி.டியில் பார்த்திருந்த ஆங்கிலப் படத்தின் ரோமன்ஸ் காட்சிகள் நினைவுக்கு வந்தன. சட்டென அந்தப் படுக்கை அறிவியல் கண் கொண்டு காட்டப்பட்டது. படுக்கை விரிப்பு பெரும் கானகமென விரிந்து அதில் கொடிய விலங்குகள் உலவுவது போல கணினித்திரை பயம் காட்டியது. “இவையெல்லாம் கண்ணுக்குத் தெரியாத கிருமிகள்... நமக்குத் தெரியாமல் நம்மை

இம்சிக்கிறது. எங்களது சாதனத்தால் மட்டுமே அவற்றைக் கொல்ல முடியும். மற்ற எந்த மருந்தும் உதவாது" என்றார். எனது கிழிந்த பாய்க்குள் உலாவிக் கொண்டிருக்கும் அந்தக் கிருமிகளைப் பற்றிய பயம் தொற்றிக்கொண்டது.

எங்கள் பயணம் அடுத்தடுத்த தளங்களுக்குத் தொடர்ந்து இறுதியாக 3A என்ற பகுதிக்கு வந்தோம். நிறைய வட்ட மேசைகள் .ஒவ்வொரு மேசையைச் சுற்றிலும் சுமார் ஐந்துக்கும் குறைவான மனிதர்கள் அமர்ந்திருந்தார்கள். ஆண்கள் பெரும்பாலும் உயர் ரக கோட் அணிந்திருந்தனர். எங்களுக்கு ஒரு மேசை காத்திருந்தது. தோழியின் கணவர் எங்களுக்கு இடம் பிடித்து வைத்திருந்தார். அவரும் கோட் அணிந்திருந்தார்.

"எப்படி இருக்கிறது."

"ஓ நன்றாக இருக்கிறது."

"வியாபார யுக்தியைப் பார்க்கிறீர்களா?"

"பார்க்கலாமே"

"இந்த வியாபாரத்தில் ஈடுபட விருப்பமா?" என் விருப்பத்தை அறிந்து கொள்வதில்கூட அவர்களுக்கு ஆர்வம் இருந்தது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

"துளியும் இல்லை"

"பிறகு ஏன் பார்க்கிறீர்கள்"

"நீங்கள் காட்டுவதால்."

தோழி தன் கணவர் நேரம் விரையமாகக்கூடாது என மிக கவனமாக இருந்தார். நான் வேலையற்றவனானதாலும் மேலும் ஒரு லும்பன் என்பதாலும் என் நேரம் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. தன் முயற்சியிலிருந்து சற்றும் பின் வாங்காத அவர் மீண்டும் பேசத் தொடங்கினார்.

"உங்க மனசுல நிறைய தாழ்வு மனப்பான்மையும் பயமும் குழப்பமும் இருக்கு. புத்தர போல சூன்யமா ஆயிடுங்க, அப்பதான் புது விஷயங்களை உங்களால ஏற்றுக்கொள்ள முடியும். "

"சூன்யமான பிறகு ஏற்றுக்கொள்ள எதுவும் வேண்டாமே."

"உங்களுக்கு எதுலதான் விருப்பம்."

"நிறைய." குறிப்பாக என்னை இம்சை படுத்துபவர்களின் தாடைக்கும் கழுத்துக்கும் இடைப்பட்ட இடத்தை நோக்கி குத்துவதுதான் என்பதை அப்போது சொல்லவில்லை.

"இதெல்லாம் மாயை என உங்களுக்குத் தெரியலயா?"

"நல்லாவே தெரியுது... நீங்க பேசிக்கொண்டிருக்கும் விஷயம் உட்பட மாயைன்னு."

விவாதம் முற்றிக்கொண்டிருந்தது. என் குரலின் ஒலி முன்பிலும் கூடியிருந்தது. என்னிடம் பேசிக்கொண்டிருந்த தோழியின் கணவரும் கொஞ்சம் உஷ்ணம் அடைந்திருந்தார்.தோழி சமாதானம் பண்ணும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.அதற்கு மேல் பேசும் விருப்பம் இல்லை. எனது பொறுமை மீது எனக்குக் கணிசமான அளவு நம்பிக்கை குறைந்திருந்தது. கட்டடத்தை விட்டு வெளியேற முயன்றேன்.

தோழி அன்பான குரலில் பேசத்தொடங்கினார். "இன்று எனது வருவாய் மாதத்திற்கு ஆறாயிரம் ரிங்கிட். இது இன்னும் அதிகரிக்கும். இத்தனைக்கும் நான் இத்தொழிலில் அலட்டிக்கொள்வதே இல்லை.பகுதி நேரமாகவே செய்கிறேன்"

இருக்கலாம். நாளை நானும் வேறொருவனை ஓசி சாப்பாடு வாங்கித் தருகிறேன் என கூறி இங்கு அழைத்து வரும் சந்தர்ப்பத்தை விரும்பவில்லையே.

* * *

அன்று இரவு எனக்கு மற்றுமொரு தோழி தொடர்பு கொண்டார். என்னை அந்த வர்த்தக வளாகத்தில் பார்த்தாகவும், என்னைப் போன்ற ஒரு சோம்பேறி அங்கு உலவுவது அசாத்தியமானது என ஆச்சரியப்பட்டார். உண்மையில் அந்த வியாபாரம் நல்ல இலாபம் அளிக்கக்கூடியது என்றும் அவருக்கு இப்போது ஆராயிரம் ரிங்கிட் வரை கிடைப்பதாகவும் சொன்னார்.

அதற்கு என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டேன்.ஒரு தொகையைச் செலுத்திவிட்டு ஐந்து பேரை அதுபோல சேர்த்துவிட வேண்டியதுதான்.அவர்களும் அதுபோல ஐந்தைந்து பேராகச் சேர்க்க வேண்டும்.தொகை செலுத்தியதற்கான தரமான பொருள் நமக்குக் கிடைப்பதோடு ஐந்து பேரை சேர்த்தவுடன் பணமும் கிடைக்கும் என்றார்.இதில் முதலிலேயே சேர்ந்துவிட்டால் பின்னால் வருத்தப்பட

வேண்டாம்.காரணம் இதில் தமிழர்கள் இப்போதுதான் ஈடுபடுகிறார்கள்.வெகு எளிதில் ஆட்களைப் பிடித்து விடாலாம் என்றார்.

நான் சட்டென விஜயகாந்த் தொனியில் பேசத்தொடங்கினேன். (மோசமான விஷயங்களை பேச மோசமான நபர்களைத்தானே பின்பற்ற வேண்டியுள்ளது.) ஒரு முறை நீங்கள் சேர்க்கும் நபர்களின் எண்ணிக்கை ஐந்து. இதில் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்தால் ஐந்தாவது குழுவில் இருப்பவர்களின் எண்ணிக்கை 3625.ஒரு வேளை உங்கள் வியாபாரம் மூடப்பட்டாலோ அல்லது தமிழர்கள் அறிவாளிகளாக மாறிச் சேராவிட்டாலோ பாதிக்கப்பட்ட பணம் இழப்போர் எண்ணிக்கை மூவாயிரத்துக்கு மேல் இலாபம் உண்டு கொளுத்தவர்களின் எண்ணிக்கை 880.இது சராசரி ஐந்தாவது அடுக்குவரை.அதற்கு மேலும் உங்கள் வணிகம் தொடர்ந்தால் ஏமாறுபவர்களின் எண்ணிக்கை பல ஆயிரம் அல்லது பல இலட்சம். எனக்கு இலாபம் கிடைப்பது இருக்கட்டும் நான் சொன்ன சில ஆயிரம் பேர் பற்றி உங்கள் கருத்து என்ன என்றேன்.

தனக்குச் சோர்வாக இருப்பதாகக் கூறி “குட் நைட்” என்றார்.

“சுவிட் ட்ரிம்”